மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

வண்ணாடு கிராமத்திற்கு சாலை.

*4294 திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பச்சைமலையில் வண்ணாடு கிராமத்திற்கு சாலை அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ; பேரவைத் தலைவர் அவர்களே,

பச்சைமலையில் ''வண்ணாடு'' பஞ்சாயத்து பகுதியிலுள்ள கிராமங்கள் வழியாக, உப்பிலியாபுரம் ஒன்றியத்தைச் சார்ந்த மேல் செங்காட்டுப்பட்டியிலிருந்து தோனூர் வரை, கி.மீ. 0/0—20/5 வரை, ரூ. 143 லட்சம் செலவில் சாலை அமைக்கும் பணிக்கு, அரசு ஆணை (நிலை) எண். 2015, சமூக நலத்துறை, நாள் : 28—10—1987-ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இச்சாலையில் பாதி வேலைகள் இந்த நிதியாண்டில் நடைபெறும். மீதமுள்ள பாதி வேலை அடுத்த ஆண்டிலும் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(10-05 மணி)

திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள வண்ணாடு, கோம்பை, தென் பெண்ணாடை ஆகிய கிராமங்களுக்குச் சாலை அமைக்கத் திட்டமிட்டுள்ளதற்காக தொகுதியின் சார்பாகவும் அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : சுருக்கமாக முடித்ததற்காக நானும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.